மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற மின் கட்டணச் சலுகையால், குறைந்த கட்டணம் வசூலிக்கிற காரணத்தால், ஆண்டு ஒன்றுக்கு 360 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது.

10-20 மணி

இதைச் சரிக்கட்டுவதற்கே நமது முதலமைச்சர் அவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சூழ்நிலையிலே மேலும் 5 ஹார்ஸ் பவருக்கு மேலே வைத்திருக்கக்கூடியவர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கக்கூடிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சப்-ஸ்டேஷன் கட்டுவதற்கு அரசு முன்வந்ததற்கு நன்றி சொல்லி, இது மிக விரைவில் செயல்பட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இதை ஏற்றுக்கொண்டுதான் 188 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவிலே மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் தொடங்குவதற்கான எல்லா முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எந்த அளவிற்கு வேகமாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாகச் செய்து முடிக்கப்படும்.

மோர்தனா அணைக் கட்டும் திட்டம்.

*1374—**திரு. கே. ஆர். சுந்தரம் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

> வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில், மோர்தனா அணை கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் அருகில் மோர்தனா கிராமத்தருகில் கௌண்டியா நதியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

1990 சனவரி, 27]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோர்தனா அணையைக் கட்டுவது அரசின் ஆய்வில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அணையைக் கட்டுவதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1974—75-ஆம் ஆண்டிலே கல்நாட்டுவிழா செய்தார்கள். இடையிலே அரசு கலைக்கப் பட்டதாலே, தொடர்ந்து அந்த வேலைகள் நடைபெற வில்லை. இந்த அணையைக் கட்டி முடிக்கவேண்டும் என்று புதிய மாவட்டம் துவங்கிய நேரத்தில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வேலூர் பொதுக்கூட்டத்திலே கேட்டுக் கொண்டேன். முதலமைச்சர் அவர்களும் கட்டாயமாகக் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆய்வை முடித்து, வரும் 1990—91-ஆம் ஆண்டிலே வேலையைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த ததைப்போல. *30—3—75* அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, இந்த அணையைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்போது இதனுடைய மதிப்பீடு *330* லட்சம் தான். ஆனால் இன்றைக்கு அணையினுடைய அமைப்பும் மாறுபடுகிறது. மதிப்பீடும் உயருகிறது. எனவே இது குறித்து அரசு அந்த ஆய்வைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது. முதல்வர் அவர்கள் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அதை அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்வதா, அதற்கு அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதா என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி, நிச்சயமாக மோர்தனா அணை கட்டப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணை கட்டி முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அணையைத் துரிதமாகக் கட்டி முடித்தால் அந்த மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் நீர்ப்பாசனவசதி பெற முடியும், மேலும் குடியாத்தம் வட்டத்தில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு இதன் மூலம் குடிநீர் வசதி கிடைக்கும். ஆகவே அதைத் துரிதமாகக் கட்டி முடிக்க அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு துணைக் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மோர்தனா அணையைக் கட்டும் திட்டம் தொடங்கினால், அங்கே உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு வேறிடத்தில் விவசாயம் செய்ய அரசால் நிலம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, பட்டா நிலமாக நமக்குத் தேவைப்படுவது 94.54 ஏக்கர்தான். வனத்துறையிலேயிருந்து நாம் பெற வேண்டியது 92.12 ஏக்கர். புறம்போக்கிலேயிருந்து நாம் எடுப்பது 96 ஏக்கர். எனவே இந்தப் பட்டா நிலத்திற்கு மட்டும்தான் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த மாற்று ஏற்பாட்டை அரசு செய்யும்.

10-40 மணி

அமிர்தி அணை கட்டுதல்.

***4209 திரு. அ. இராசேந்திரன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் தொகுதியில் நாக நதியின் குறுக்கே அமிர்தி அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அணை எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்த முதனிலை ஆய்வறிக்கையை (Preliminary Estimate) தலைமைப் பொறியாளர் (ஆய்வு), அரசுக்கு அனுப்பி, இத்திட்டத்தை விரிவாக ஆய்வு செய்ய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளார். இத்திட்டம் விரிவாக ஆய்வு செய்தபின் பரிசீலித்து இவ்வணையைக் கட்டுவது குறித்து முடிவு செய்யும்.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS